செய்தி வெளியீடு எண்: 456 நாள்: 30.07.2019

# விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் – தொடரும்

மேல்நிலைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பொருளாதார உச்ச வரம்பின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட 7,39,636 மிதிவண்டிகள் உட்பட மொத்தம் 10,87,147 மிதிவண்டிகள் 2018–2019–இல் வழங்கப்பட்டுள்ளன.

3. இத்திட்டத்திற்காக 2019–2020–ஆம் ஆண்டிற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.7,300 இலட்சம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.6,548.11 இலட்சம் ஆக மொத்தம் ரூ.13,848.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 11–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கும் தொடர்ந்து விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படும். இத்திட்டம் இனிவரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**